# நமது தின கனி

காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI

Daily Morning

| Vol : 01 | Issue : 55 | 4 Pages | 25.09.2023 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 55 | 4 பக்கங்கள் | 25.09.2023 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## பிரதமரை பார்த்தே ஆகனும்.. கான்வாயை இடைமறித்து ஓடிய நபரால் பரபரப்பு



வாரணாசி, செப். 25

பிரதமர்மோடி லால் பகதூர்சாஸ்திரி விமானநிலையம் நோக்கி சென்றுக் கொண்டிருந்தார். பிரதமர்கான்வாய் குறுக்கே ஓடி வந்த நபர், பா.ஜ.க.வை சேர்ந்தவர்.

வாரணாசியில் பிரதமர் நரேந்திர மோடியின் பாதுகாப்பில் இடையூறு ஏற்பட்டது. மர்ம நபர் ஒருவர் பிரமதர் நரேந்திர மோடியின் கான்வாயை இடைமறித்து ஓடியதால், சிறிது நேரம் பரபரப்பான சூழல் ஏற்பட்டது. லால் பகதூர் சாஸ்திரி விமான நிலையம் நோக்கி சென்றுக் கொண்டிருந்த பிரதமர் மோடியின் கான்வாய் வாரணாசியின் ருத்ராக்ஷ் செண்டர் வந்த போது, இந்த சம்பவம் அரங்கேறியது. பிரதமர் கான்வாய் குறுக்கே ஓடி வந்த நபர், பா.ஜ.க.வை சேர்ந்த கிருஷ்ண குமார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது. காசியாப்பூரை சேர்ந்த கிருஷ்ண குமார், பிரதமர் மோடியின் கான்வாய் அருகே செல்ல முயன்ற நிலையில், பாதுகாப்பு மற்றும் போலீஸ் அதிகாரிகள் அவரை விரைந்து சென்று பிடித்தனர். பிரதமர் மோடியை சந்திக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே இவர் ஓடி வந்ததாக போலீசார் தெரிவித்து உள்ளனர். "பா.ஜ.க. கட்சியின் மூத்த உறுப்பினர் பரத் குமாரின் மகன், கிருஷ்ண குமார். அவர் மனநலம் பாதிக்கப்பட்டு இருந்தார், மேலும் பிரதமர் நரேந்திர மோடியை பார்க்க விரும்பியுள்ளார்," என்று பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்து உள்ளார். முன்னதாக வாரணாசியில் உருவாக இருக்கும் புதிய சர்வதேச கிரிக்கெட் மைதானத்திற்கு அடிக்கல் நாட்ட பிரதமர் நரேந்திர மோடி வாரணாசி வந்திருந்தார். இந்த சர்வதேச கிரிக்கெட் மைதானத்தின் கட்டுமான பணிகள் டிசம்பர் 2025 வாக்கில் நிறைவுபெறும் என்று தெரிகிறது.

## வளர்ச்சி சார்ந்த சவால்களை எதிர்கொள்ள இந்தியா ஒத்துழைக்கும்.. மத்திய மந்திரி ஜெய்சங்கர்



அமெரிக்கா, செப். 25

வளர்ச்சி சார்ந்த சவால்களை எதிர்கொள்ள இந்தியா ஒத்துழைப்பு வழங்கும். பல விதங்களில் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று எங்களுக்கு தெரியும்.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் ஐ.நா. பொதுசபையின் 78வது கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. இதில் கலந்து கொண்டு பேசிய மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர், வளர்ச்சி சார்ந்த சவால்களை எதிர்கொள்ள இந்தியா ஒத்துழைப்பு வழங்கும் என்று தெரிவித்தார். இது தொடர்பாக பேசிய அவர், "இந்த ஆண்டு இறுதி வரையில், நாங்கள் தான் ஜி20க்கு தலைமையாக இருப்போம். ஜி20 பதவிக்காலம் இருக்கும் போதும், முடிந்த பிறகும், நாங்கள் கூட்டாளியாகவும், பங்களிப்பாளராகவும், கூட்டணி அமைப்பவராகவும் எங்களுக்கே உரிய பாணியில் செயல்படுவோம். இதன் மூலம் மற்றவர்களையும் வளர்ச்சிக்கான சவால்களை எதிர்கொள்ள செய்வதில், நாங்கள் முன்னுதாரணமாக இருப்போம். எங்களது அனுபவங்கள் மற்றும் சாதனைகளை நல்ல விதத்தில் ஊக்கமளிக்கும் வகையில், பகிர்ந்து கொள்வோம்." "இவை பல விதங்களில் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று எங்களுக்கு தெரியும். தெற்குதெற்கு ஒத்துழைப்பு விவகாரத்தில், நாங்கள் எப்போதும் பேச்சுவார்த்தைக்கு தயாராகவே இருந்து இருக்கிறோம். இந்த விவகாரத்தில் ஆப்பிரிக்க யூனியனை ஜி20இல் இணைத்ததை நாங்கள் மேற்கோள் காட்ட விரும்புகிறோம். மேலும், இது தொடர்பான ஒத்துழைப்பு ஜி20இல் மட்டுமின்றி அதை கடந்தும் தொடரும் என்றே நம்புகிறேன்," என்று அவர் தெரிவித்தார்.

## இதை செய்ய தவறிட்டாங்க.. காவிரி விவகாரத்தில் மாநில அரசை விமர்சித்த குமாரசுவாமி



கர்நாடகா, செப். 25

கே.ஆர்.எஸ். அணையின் நீர்தேக்கத்தை முன்னாள் முதலமைச்சர் குமாரசுவாமி பார்வையிட்டார். நீரை திறந்துவிட எதிர்ப்பு தெரிவித்து அம்மாநில விவசாயிகள் தொடர் போராட்டம்.

தமிழகத்திற்கு காவிரி நீரை திறந்துவிடும் விவகாரத்தில், கர்நாடக அரசு காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தை சமாதானப்படுத்தகாங்கிரஸ்தலைமையிலான கர்நாடகஅரசுதவறிவிட்டதுஎன்றுஅம்மாநில முன்னாள் முதலமைச்சர் மற்றும் ஜனதா தளம் கட்சியின் தலைவர் எச்.டி. குமாரசுவாமி குற்றம்சாட்டி உள்ளார். இதன் காரணமாகவே காவிரி நீர் மேலாண்மை ஆணையம், தமிழகத்திற்கு 15 நாட்களுக்கு தினமும் 5 ஆயிரம் கன அடி நீரை திறந்துவிட கர்நாடக அரசுக்கு உத்தரவிட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். கே.ஆர்.எஸ். அணையின் நீர்தேக்கத்தை பார்வையிட்ட குமாரசுவாமி, அதன்பிறகு செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர், "நீர்தேக்கத்தில் உள்ள நீர் ஒவ்வொரு நாளும் குறைந்து கொண்டே வருகிறது. இங்குள்ள பயிர்களை காக்க இருமடங்கு நீரை திறந்துவிட வேண்டிய நிலைதான் நிலவுகிறது. எங்களது விவசாயிகள் இதன் காரணமாக எதிர்காலத்தில் பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டிய சூழல் உருவாகும். இங்குள்ள நிலைமை கைமீறிவிட்டது." "காவிரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரிஒழுங்காற்றுகுழுவுக்குஅரசுசரியானதகவல்களைவழங்கவில்லை. இந்த அரசாங்கம் காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தை முதல் நாளில் இருந்தே, சமாதானப்படுத்த தவறிவிட்டது. அவர்கள் இந்த விவகாரத்தை எளிதாக நினைத்துவிட்டனர்," என்று தெரிவித்து உள்ளார். தமிழகத்திற்கு நீரை திறந்துவிட எதிர்ப்பு தெரிவித்து அம்மாநில விவசாயிகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

# கோவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு: சாலைப்பணிகளை பார்வையிட்டார்



கோவை, செப். 25

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஓட்டலுக்கு செல்லாமல் கோவை மாநகராட்சி 5 மற்றும் 8வது வார்டு பகுதிகளில் நடந்து வரும் சாலை பணிகளை ஆய்வு செய்ய சென்றார். ஆய்வின் போது நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, கலெக்டர் கிராந்திகுமார், அரசு அதிகாரிகள் இருந்தனர்.

2024ல் நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலை சந்திக்க தி.மு.க. தயாராகி வருகிறது. முதல் கட்டமாக டெல்டா மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கான பயிற்சி பாசறை கூட்டம் கடந்த ஜூலை மாதம் 26ந்தேதி திருச்சியில் நடைபெற்றது. 2வது கட்ட பயிற்சி பாசறை கூட்டம் ராமநாதபுரத்தில் நடைபெற்றது. இந்தநிலையில் 3வது கட்டமாக மேற்கு மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களின் வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கான பயிற்சி பாசறை கூட்டம் திருப்பூர் மாவட்டம் காங்கேயம் படியூர் தொட்டியப்பாளையத்தில் நேற்று நடக்கிறது. இந்த கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கு ஆலோசனைகள் வழங்கி உரையாற்றுகிறார்.

இதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று காலை சென்னையில் இருந்து விமானம் மூலமாககோவைவிமானநிலையத்திற்கு வந்தார். கோவை விமான நிலையத்தில் அவருக்கு, கோவை மாவட்ட ஒருங்கிணைந்த தி.மு.க சார்பில் ஏராளமான நிர்வாகிகள், தொண்டர்கள் திரண்டு வந்து மேள, தாளங்களுடன் உற்சாக வரவேற்பு அளித்தனர். அதனை தொடர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், காரில் ஓட்டலுக்கு செல்வார் என அனைவரும் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் திடீரென முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஓட்டலுக்கு செல்லாமல் கோவை மாநகராட்சி 5 மற்றும் 8வது வார்டு பகுதிகளில் நடந்து வரும் சாலை பணிகளை ஆய்வு செய்ய சென்றார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், காளப்பட்டி பகுதியில் உள்ள துளசி கார்டன் பகுதிக்கு சென்றார். அங்கு நடந்து வரும் சாலை பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது சாலையில் 2 அடி தோண்டி பார்த்து ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து அங்கு நடக்கும் பணிகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். மேலும் பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். அங்கு ஆய்வை முடித்துவிட்டு, நேராக விளாங்குறிச்சி நஞ்சப்பா சாலையில் நடந்து வரும் சாலை பணியையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதேபோல் கரட்டுமேடு வி.கே.நகர் பகுதிக்கு சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அங்கு நடந்து வரும் சாலை பணியையும் பார்வையிட்டார். இந்த ஆய்வின் போது நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, கலெக்டர் கிராந்திகுமார், அரசு அதிகாரிகள் இருந்தனர். பின்னர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அங்கிருந்து புறப்பட்டு தனியார் நட்சத்திர ஓட்டலுக்கு சென்றார். அங்கு அவர் சிறிது நேரம் ஓய்வெடுக்கிறார். பின்னர் மாலையில் அவர் கார் மூலமாக திருப்பூர் மாவட்டம் காங்கயம் படியூரில் நடக்கும் மேற்கு மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சி கூட்டத்தில் பங்கேற்க புறப்பட்டு செல்கிறார். திருப்பூர் செல்லும் வழியிலும் அவருக்கு கட்சியினர் உற்சாக வரவேற்பு கொடுக்கின்றனர். முதலமைச்சர் வருகையையொட்டி கோவை மாவட்டத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. விமானநிலையம், அவர் தங்கும் நட்சத்திர ஓட்டல் ஆகிய பகுதிகளில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு போலீசார் தொடர்ந்து பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் நேற்று இரவில் கோவை மாநகர் முழுவதும் ஆங்காங்கே வாகன சோதனையும் தீவிரப்படுத்தப்பட்டிருந்தது. போலீஸ் கமிஷனர் பாலகிருஷ்ணன் உத்தரவின் பேரில் மாநகர பகுதிகளில் உள்ள சோதனை சாவடிகளில் சோதனை நடத்தப்பட்டது. அந்த வழியாக வந்த வாகனங்கள் அனைத்தும் தீவிர சோதனைக்கு பின்னரே அனுமதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# காங்கயத்தில் தி.மு.க., வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம்: கட்சி நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்குகிறார் மு.க.ஸ்டாலின்



காங்கயம், செப். 25

படியூர்தொட்டியப்பாளையத்தில் 40 ஏக்கர் பரப்பளவில் அண்ணா அறிவாலயம் போன்ற முகப்பு தோற்ற நுழைவு வாயிலுடன் பிரமாண்ட பந்தல், மேடை அமைக்கப்பட்டு இருந்தது. 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அமரும் வகையில் இருக்கைகள் போடப்பட்டு இருந்தது.

நாடு முழுவதும் உள்ள அரசியல் கட்சிகள் வரும் 2024ல் நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலை சந்திக்க தீவிரமாக தயாராகி வருகின்றன. அந்த வகையில் தமிழகத்தின் பிரதான கட்சியான தி.மு.க.வும் தேர்தலை எதிர்கொள்ள தயாராகி வருகின்றது. தி.மு.க. தலைவரும் தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின், தமிழ்நாடுபுதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளையும் கைப்பற்ற பல்வேறு வியூகங்களை வகுத்து செயல்பட்டு வருகிறார். அதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு முழுவதும் தி.மு.க.வில் புதிதாக ஒரு கோடி உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர். மேலும் தமிழகம் முழுவதும் 65 ஆயிரம் வாக்குச்சாவடிக்கு பொறுப்பாளர்களும் நியமிக்கப்பட்டனர். அவர்களின் குறைகள் மற்றும் தேவையை கேட்க மு.க.ஸ்டாலின் திட்டமிட்டார். இதற்காக தமிழகத்தில் உள்ள தி.மு.க. மாவட்டங்களை 5 மண்டலங்களாக பிரித்து, மண்டலம் வாரியாக வாக்குச்சாவடி பொறுப்பாளர்களை சந்தித்து ஆலோசனைகள் வழங்கி வருகிறார். அதன்படி முதல் கட்டமாக டெல்டா மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கான பயிற்சி பாசறை கூட்டம் கடந்த ஜூலை மாதம் 26ந்தேதி திருச்சியில் நடைபெற்றது. இதில் 15 தி.மு.க. மாவட்டத்துக்கு உட்பட்ட 12 ஆயிரத்து 645 வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். 2வது கட்ட பயிற்சி பாசறை கூட்டம் ராமநாதபுரத்தில் நடைபெற்றது. இதில் 19 மாவட்ட கழகங்களை சேர்ந்த 16,978 வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். 2 கூட்டங்களிலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கினார். இந்தநிலையில் 3வது கட்டமாக மேற்கு மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களின் வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கான பயிற்சி பாசறை கூட்டம் திருப்பூர் மாவட்டம் காங்கேயம் படியூர் தொட்டியப்பாளையத்தில் இன்று நடைபெற்றது. இதில் தி.மு.க.வின் திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, கரூர், கோவை மாநகர், கோவை வடக்கு, கோவை தெற்கு, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, நீலகிரி ஆகிய 14 மாவட்டங்களை சேர்ந்த 14ஆயிரத்து 411 வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பங்கேற்றனர். மேலும் தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் என 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இந்த பயிற்சி பாசறை கூட்டம் பிரமாண்ட மாநாடு போல் நடைபெற்றது. இதற்காக படியூர் தொட்டியப்பாளையத்தில் 40 ஏக்கர் பரப்பளவில் அண்ணா அறிவாலயம் போன்ற முகப்பு தோற்ற நுழைவு வாயிலுடன் பிரமாண்ட பந்தல், மேடை அமைக்கப்பட்டு இருந்தது. 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அமரும் வகையில் இருக்கைகள் போடப்பட்டு இருந்தது. கூட்டத்தில் பங்கேற்பதற்காக மேற்கு மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களை சேர்ந்த தி.மு.க., வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தொண்டர்கள் கார், வேன், பஸ் உள்ளிட்ட வாகனங்களில் காலையில் இருந்தே படியூருக்கு வரத்தொடங்கினர். கூட்டம் தொடங்கியதும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் மாவட்டம் வாரியாக அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இருக்கைகளுக்கு சென்று அமர்ந்தனர். சரியாக காலை 11மணிக்கு பயிற்சி பாசறை கூட்டம் தொடங்கியது. இதில் கட்சியின் நிர்வாகிகள் தேர்தல் கள செயல்பாடுகள் குறித்து ஆலோசனைகள் வழங்கினர். முதலில் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணிகள் குறித்து தி.மு.க. வக்கீல் அணி செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி., விளக்கம் அளித்து பேசினார். பின்னர் வாக்காளர் கணக்கெடுப்பு பணிகள் மற்றும் செயலி குறித்து நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளர் கே.ஆர்.என். ராஜேஷ்குமார் எம்.பி., விரிவாக எடுத்துக்கூறினார். அதன்பிறகு திராவிட மாடல் அரசின் சமூக நலத்திட்டங்கள் குறித்து தமிழ்நாடு மாநில வளர்ச்சிக்குழு துணைத்தலைவர் ஜெயரஞ்சன் பேசினார். சமூக வலைதளங்கள் பயன்பாடு, செயல்படுத்த வேண்டிய முறைகள் பற்றி மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் தரணி தரன் விளக்கமளித்து பேசினார். பின்னர் மதியம் உணவு இடைவேளைக்கு பிறகு 3.15 மணிக்கு நடைபெறும் கூட்டத்தில் திராவிட மாடல் அரசின் சமூக நலத்திட்டங்கள் குறித்து தி.மு.க. கொள்கை பரப்புக்குழு செயலாளர் திருச்சி சிவா எம்.பி., பேசுகிறார். தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் வரவேற்று பேசுகிறார். மாலை 435 மணிக்கு தி.மு.க. பொதுச்செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் தலைமை உரையாற்றுகிறார். திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் இல.பத்மநாபன் நன்றி கூறுகிறார். மாலை 5மணிக்குதி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார். பாராளுமன்ற தேர்தலில் வாக்குச்சாவடி பொறுப்பாளர்களின் முக்கியத்துவம் என்ன, தி.மு.க. செய்த சாதனைகளை எப்படி மக்களிடத்தில் கொண்டு செல்ல வேண்டும். வாக்காளர்பட்டியல் சரிபார்ப்பு பணி உள்பட பல முக்கிய அறிவுரைகளை வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கு மு.க. ஸ்டாலின் வழங்க உள்ளார். பயிற்சிபாசறைகூட்டத்தில் பங்கேற்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையில் இருந்து விமானம் மூலம் புறப்பட்டு 11 மணிக்கு கோவை வந்தார். பின்னர் கோவை லீ மெரிடியன் ஓட்டலில் தங்கி சிறிது நேரம் ஓய்வெடுக்கும் அவர், அங்கு தி.மு.க. நிர்வாகிகளை சந்திக்கிறார். மதிய உணவு முடிந்து அங்கிருந்து காரில் புறப்பட்டு காங்கயம் படியூரில் நடக்கும் பயிற்சி பாசறை கூட்டத்திற்கு வருகிறார். பயிற்சி பாசறை கூட்டத்தில் பங்கேற்க வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு காங்கயம் படியூரில் தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளிக்கின்றனர். மேலும் கோவையில் இருந்து காங்கயம் வரும் வழியில் தி.மு.க. சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மு.க.ஸ்டாலினை வரவேற்று படியூர் பகுதியில் தி.மு.க. கொடிதோரணங்கள் கட்டப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி விழாக்கோலம் பூண்டுள்ளது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வருகையை முன்னிட்டு 2ஆயிரத்திற்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். கோவையில் இருந்து காங்கயம் செல்லும் வழியில் முக்கிய இடங்களில் போலீசார் பாதுகாப்புக்காக நிறுத்தப்படுகின்றனர். காங்கயத்தில் பயிற்சி பாசறை நிகழ்ச்சி முடிந்ததும் கோவை செல்லும் முதலமைச்சர் அங்கிருந்து இரவு 815மணிக்கு விமானம் மூலம் சென்னை புறப்பட்டு செல்கிறார்.

# தமிழகத்தின் 15 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம் தகவல்



சென்னை, செப். 25

சென்னை, திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் லேசான மழை பெய்யலாம். அடுத்த மூன்று மணி நேரத்தில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு.

தமிழகத்தின்கிருஷ்ணகிரி, தருமபுரி, திருப்பத்தூர், வேலூர்,ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, காஞ்சிபுரம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் அடுத்த மூன்று மணி நேரத்திற்கு இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருக்கிறது. இதுதவிர கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களை சுற்றியுள்ள பகுதிகளில் அடுத்த மூன்று மணி நேரத்தில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருக்கிறது. இதே போன்று சென்னை, திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களை சுற்றியுள்ள பகுதிகளில் லேசான மழை பெய்யலாம் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருக்கிறது.

# அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை செயல்பாட்டுக்கு வந்தது




அரியலூர், செப். 25

அரியலூரில் ரூ.347 கோடியில் புதிதாக கட்டப்பட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை தற்போது செயல்பாட்டுக்கு வந்துள்ளது மருத்துவமனை செயல்பாட்டுக்கு வந்துள்ளதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி அரியலூர்செந்துறை சாலையில் 26 ஏக்கர் பரப்பளவில்ரூ.347கோடி மதிப்பில் புதிய அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது.

இங்கு தரைத்தளம் மற்றும் 2 மாடிகளுடன் கூடிய நிர்வாக அலுவலகம், 6 மாடிகளுடன் கூடிய மருத்துவக்கல்லூரி, வங்கி, அஞ்சல் நிலையம், மருத்துவக்கல்லூரி முதல்வருக்கு தரைத்தளம் மற்றும் முதல் மாடியுடன் கூடிய கட்டிடம், 9 நவீன ஆபரேஷன் தியேட்டர்கள், மாணவ மாணவிகளுக்கு 5 மாடிகள் கொண்ட விடுதி கட்டிடம், பேராசிரியர்கள், உதவிப்பேராசிரியர்கள், அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. சுமார் 700 படுக்கை வசதிகள் கொண்ட இந்த மருத்துவமனையில் உள் நோயாளிகளுக்கு மட்டும் பகுதி நேரமாக சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்தநிலையில் கடந்த வாரம் முதல் இந்த மருத்துவமனை 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. உள்நோயாளிகளுக்கு பழைய அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது புதிய மருத்துவமனைக்கு உள்நோயாளிகள் சிகிச்சை பிரிவு மாற்றப்பட்டுள்ளது.

இங்கு எம்.ஆர்.ஐ. சி.டி. ஸ்கேன் அமைக்கும் பணிகள் மட்டும் தற்போது நடந்து வருகிறது. அந்த பணிகளும் விரைந்து முடிக்கப்பட்டு ஒரு வாரத்திற்குள் திறக்கப்படும் என தெரிகிறது. தற்சமயம் பழைய அரசு மருத்துவமனையில் பிரசவ வார்டும், குழந்தைகள் சிகிச்சை வார்டும் மட்டும் செயல்பட்டு வருகிறது. கூடிய விரைவில் இந்த வார்டுகளையும் புதிய மருத்துவமனைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. புதிய மருத்துவமனை தற்போது செயல்பாட்டுக்கு வந்துள்ளதால் அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

# அண்ணா குறித்து அண்ணாமலை பேசிய கருத்திற்கு முதல்வரின் பதில் என்ன? கோவையில் சீமான் கேள்வி



கோவை, செப். 25

அண்ணாவை கொடியில் மட்டும் வைத்திருக்கும் அ.தி.மு.க. அது குறித்து எதிர்வினையாற்றி இருக்கிறது. தி.மு.க.வில் ஆர்.எஸ்.பாரதி மட்டுமே எதிர்வினையாற்றி இருக்கிறார்.

நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் கோவையில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது: இந்தியா கூட்டணியில் நாங்கள் இல்லை. தேச நலன் என வரும் பொழுது சில விஷயங்களை விட்டுக் கொடுக்க வேண்டும். மேற்கு வங்கத்தில் காங்கிரசும், கம்யூனிஸ்டும் மம்தாவை எதிர்ப்பார்கள். கேரளாவில் கம்யூனிஸ்டும், காங்கிரசும் மாறி மாறி வாக்கு செலுத்துவார்களா? மாநிலத்திற்கு ஒரு கொள்கை முடிவு எடுப்பது எப்படி சரியாக இருக்கும். பேரறிஞர் அண்ணா குறித்து அண்ணாமலை பேசிய விவகாரத்தில் அண்ணா தொடங்கிய கட்சியானது இதுவரை எதிர்வினையாற்றவில்லை. ஆனால் அண்ணாவை கொடியில் மட்டும் வைத்திருக்கும் அ.தி.மு.க. அது குறித்து எதிர்வினையாற்றி இருக்கிறது.பா.ஜ.கவுடன் கூட்டணி முறிந்தாலும் பரவாயில்லை என குரல் கொடுத்து இருக்கிறார்கள். அ.தி.மு.க.வின் இந்த செயல்பாடு மிகவும் பாராட்டுக்குரியது. தி.மு.க.வில் ஆர்.எஸ். பாரதி மட்டுமே எதிர்வினையாற்றி இருக்கிறார். இதில் முதல்வரின் கருத்து என்ன? என்பது கேள்விக்குறியாக உள்ளது. உதயநிதி, கருணாநிதி ஆகியோரை விமர்சித்து இருந்தால் பொங்கி எழுந்திருப்பார்கள். அண்ணா என்பதால் கண்டு கொள்ளவில்லை. எடப்பாடி பழனிச்சாமி பேசவில்லை என்றாலும் அவரது கட்சியில் இருந்து முன்னாள் அமைச்சர்கள், 2ம் கட்ட தலைவர்கள் என அனைவரும் பேசுகிறார்கள். போரை பொறுத்தவரை மன்னன் எப்பொழுதுமே தளபதிகளை சண்டைக்கு அனுப்புவார்.

தோற்கும் பொழுது தான் அவர் களத்திற்கு வருவார். அது போல தான் தனது தளபதிகளை எடப்பாடியார் களத்திற்கு அனுப்பி இருக்கின்றார். இவ்வாறு அவர் கூறினார்.

# கடலூர் மாநகராட்சியில் பாதியில் நிறுத்தப்பட்ட வாய்க்கால் கட்டுமான பணிகள்: பருவமழைக்கு முன்பு முடிக்கப்படுமா?



கடலூர், செப். 25

கடலூர் மாநகராட்சியில் 45 வார்டுகள் உள்ளன. இங்கு கழிவுநீர் செல்வதற்கு வாய்க்கால்கள் இருக்கிறது. கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் ரூ.44 கோடி மதிப்பீட்டில் புதிய வடிகால் வாய்க்கால் கட்டுவதற்கு பணிகள் தொடங்கப்பட்டது.

இதனால் மழைக்காலங்களில்கழிவுநீர்வெளியேற முடியாமல் வீடுகளுக்குள் மழை நீர் மற்றும் கழிவு நீர் புகுந்து பெருமளவில் சேதம் ஏற்பட்டது. இதனால் வடிகால் வாய்க்கால் அமைக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வந்தது. கடலூர்வில்வ நகர்பகவதி அம்மன் கோவில் தெருவில் வடிகால் வாய்க்கால் கட்டப்பட்டு வந்த நிலையில், இப்பணி பாதியில் நிறுத்தப்பட்டது.

இதன் காரணமாக காலியாக உள்ள இடங்களில் கழிவுநீர் குட்டை போல் தேங்கி கடும் துர்நாற்றம் வீசி வருகிறது. மேலும், மழைநீர் வடிகால் வாய்க்கால் வழியாக செல்ல முடியாமல் அந்தப் பகுதிகளில் உள்ள வீடுகளை சூழ்ந்து பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றது. இது தொடர்பாக பலமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு புகார் அளித்தும், நடவடிக்கை எடுக்கவில்லை. இதேபோல கடலூர் மாநகராட்சி பகுதியில் புதிதாக வடிகால் வாய்க்கால் கட்டும் பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் பொதுமக்கள் முன்பை விட தற்போது அதிகளவில் பாதிப்படைந்து வருகின்றனர். ஆகையால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக ஆய்வு செய்து, பாதியில் நிறுத்தப்பட்டுள்ள வடிகால் வாய்க்காலை முழுமையாக கட்டி முடிக்க வேண்டும். வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பு இதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நாகையில் கடன் மேளா

நாகப்பட்டினம்,செப். 25

நாகப்பட்டினம் கூட்டுறவு சங்க நாகை மண்டல இணைப்பதிவாளர் அருள் அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: நாகை கலெக்டர் அலுவலகத்தில் முன்னாள் முதல்அமைச்சர் கருணாநிதியின் நூற்றாண்டு விழாவையொட்டி நாகை மாவட்ட கூட்டுறவுத்துறையின் சார்பில் கடன் மேளா நாளை (செவ்வாய்க்கிழமை) நடக்கிறது. கலெக்டர் ஜானி டாம் வர்கீஸ் தலைமையில் நடக்கும் இந்த கடன் மேளாவில் மகளிர் சுயஉதவிக்குழு கடன்கள், வட்டியில்லா கால்நடை பராமரிப்பு கடன், வட்டியில்லா மீனவர் கடன், வட்டியில்லா மாற்றுத்திறனாளிகள் கடன் உள்ளிட்ட ரூ.15 கோடி மதிப்பில் கடன்கள் வழங்கப்பட உள்ளன. இதில் வைப்புத்தொகை திரட்டுதல், பல்வேறு வகையான கடன் மனுக்கள் பெறுதல், புதிய சேமிப்பு கணக்குகள் தொடங்குதல், மத்திய கூட்டுறவு வங்கியின் தொழில் நுட்ப சேவைகளை விளம்பரப்படுத்துவது ஆகியவை திட்டமிடப்பட்டுள்ளது. எனவே கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி தங்களின் கடன் தேவைகளைபூர்த்தி செய்து கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஊராட்சிகளுக்கான 4வது குடிநீர் திட்டப்பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்: விவசாயிகள் வலியுறுத்தல்

திருப்பூர், செப். 25

இந்தப் பகுதியில் மான், மயில்களுக்கு சரணாலயம் அமைத்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தை காப்பாற்ற வேண்டும் ஊத்துக்குளி மின்வாரிய முறைகேடுகளை விசாரிக்க நியமிக்கப்பட்ட அலுவலர் ஈஸ்வரமூர்த்தி மீது பல்வேறு புகார்கள் உள்ளன.

திருப்பூர் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், அவிநாசி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. இதற்கு, திருப்பூர் சப்கலெக்டர் ஸ்ருதன் ஜெய்நாராயணன் தலைமை வகித்தார். அவிநாசி தாசில்தார் மோகனன் வரவேற்றார். கூட்டத்தில் விவசாயிகள் பேசியதாவது: அவிநாசிவட்டளபதியில் அரசுக்கு சொந்தமான நிலத்தில் வீட்டுமனைப் பிரிவு அமைத்து விற்பனை செய்துள்ளனர்.

இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஊத்துக்குளி வெங்கலப்பாளையத்தில் கல்குவாரி சட்டவிரோதமாக செயல்படுகிறது. அவிநாசி வட்டத்தில் மான், மயில்கள் அதிக அளவில் இருப்பதால், விவசாயம் கடுமையாக பாதிக்கப்படுகிறது. இந்தப் பகுதியில் மான், மயில்களுக்கு சரணாலயம் அமைத்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தை காப்பாற்ற வேண்டும். அத்திக்கடவு அவிநாசி திட்டத்தில் விடுபட்ட குளம் குட்டைகளை இணைக்க வேண்டும். ஊத்துக்குளி புன்செய்தளவாய்பாளையத்தில் வெறிநாய்கள் கடித்ததில், ஆடுகள் உயிரிழந்தன.

எனவே, சம்பந்தப்பட்ட விவசாயிக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும். தெருநாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த உள்ளாட்சி அமைப்புகள் மூலம் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். வஞ்சிபாளையம் குட்டைக்காக நிலம் கொடுக்கப்பட்டது. ஆனால் இன்னும் பட்டா மாறுதல் செய்யப்படாமல் உள்ளது. உடனடியாக பட்டா மாறுதல் செய்யும் பணிகளை வருவாய்த்துறை தொடங்க வேண்டும். ஊராட்சிகளுக்கான 4வது குடிநீர் திட்டப்பணிகளை விரைந்து முடிக்க வேண்டும். அவிநாசி பேரூராட்சி 2வது வார்டில், சங்கமாங்குளத்துக்கு செல்லும் மடத்துப்பாளையம் சாலை பிரதான வாய்க்காலில் சாக்கடை நீர் கலப்பதால், குளத்தின் நீராதாரம் பாதிக்கப்படுகிறது. ஊத்துக்குளி மின்வாரிய முறைகேடுகளை விசாரிக்க நியமிக்கப்பட்ட அலுவலர் ஈஸ்வரமூர்த்தி மீது பல்வேறு புகார்கள் உள்ளன. அவரை மாற்ற வேண்டும் என்றனர்.

கோரிக்கைகள் குறித்து அந்தந்த துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தி விரைவில் ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சப்கலெக்டர் ஸ்ருதன் ஜெய்நாராயணன் தெரிவித்தார்.

# மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர் கூட்டம்: 27ந்தேதி நடக்கிறது

திருப்பூர், செப். 25

மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் உள்ள அறை எண் 20 ல் நடைபெறுகிறது. கூட்டமானது 27 ந்தேதி (புதன்கிழமை) அன்று மாலை 3 மணி அளவில் நடைபெறுகிறது.

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு குறைதீர்க்கும் கூட்டம் வருகிற 27ந்தேதி (புதன்கிழமை) நடைபெறுகிறது.

இது குறித்து திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு விவரம் வருமாறு:

திருப்பூர் மாவட்ட அளவிலான மாற்றுத் திறனாளிகளுக்காக குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் உள்ள அறை எண் 20 ல் வருகிற 27ந்தேதி (புதன்கிழமை) மாலை 3 மணி அளவில் நடைபெறுகிறது. இதில் மாற்றுத் திறனாளிகள் தங்களது கோரிக்கைகளை மாவட்ட கலெக்டரிடம் மனுவாக வழங்கலாம்.

எனவே திருப்பூர் மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் இந்த கூட்டத்தில் பங்கேற்று பயனடையலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மூலனூர் ஒழுங்குமுறை சந்தையில் ரூ.1.26 கோடிக்கு பருத்தி விற்பனை



மூலனூர், செப். 25

இந்த வாரம் வரத்து அதிகமாக இருந்ததால் வியாழக்கிழமை நள்ளிரவு வரை ஏலம் நீடித்தது. திருப்பூர், ஈரோடு, சேலம், கோவை மாவட்டங்களை சேர்ந்த 23 வணிகர்கள் ஏலத்தில் பங்கேற்றனர்.

வெள்ளக்கோவிலை அடுத்த மூலனூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ. 1.26 கோடிக்கு பருத்தி விற்பனை நடைபெற்றது. இந்த வாரம் வரத்து அதிகமாக இருந்ததால் வியாழக்கிழமை நள்ளிரவு வரை ஏலம் நீடித்தது. கோவை, திருப்பூர், ஈரோடு, திருச்சி, கரூர், திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து 496 விவசாயிகள் 5,756 மூட்டைகளில் மொத்தம் 1,845 குவிண்டால் பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். திருப்பூர், ஈரோடு, சேலம், கோவை மாவட்டங்களை சேர்ந்த 23 வணிகர்கள் ஏலத்தில் பங்கேற்றனர். விலை குவிண்டால் ரூ. 6,450 முதல் ரூ. 7,472 வரை விற்பனையானது. சராசரி விலை ரூ. 6,850. கடந்த வார சராசரி விலை ரூ. 6,800. ஏலத்துக்கான ஏற்பாடுகளை திருப்பூர் விற்பனைக் குழு செயலாளர் சுரேஷ்பாபு, விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சிவகுமார் ஆகியோர் செய்திருந்தனர்.

# வெங்காயம், வாழைப்பயிர்களுக்கு காப்பீடு விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை அழைப்பு



திருப்பூர், செப். 25

காற்றினால் ஏற்படும் பாதிப்பு மற்றும் வறட்சியால் ஏற்படும் பாதிப்புக்கு இழப்பீடு பெற முடியும். இழப்பீடாக ஏக்கருக்கு ரூ.44,550 வரை கிடைக்கும்.

வெங்காயம், வாழைப் பயிர்களுக்கு காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை அழைப்பு விடுத்துள்ளது. இது குறித்து பொங்கலூர் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் ஷர்மிளா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு விவரம் வருமாறு: ராபி பருவத்தில்பிரதமரின் பயிர் காப்பீடு திட்டத்தில், சின்ன வெங்காயம் மற்றும் வாழைக்கு பயிர் காப்பீடு அறிவிக்கப்பட்டுள்ளது. பொங்கலூர் குறுவட்டத்தில், வாழை சாகுபடி செய்யும் விவசாயிகள், தெற்கு அவிநாசிபாளையம் குறுவட்டத்தில், சின்ன வெங்காயம் சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகள் இத்திட்டத்தில் பயன் பெறலாம். நடவு முதல் அறுவடைக் காலங்கள் வரை ஏற்படும் வெள்ள பாதிப்பு, காற்றினால் ஏற்படும் பாதிப்பு மற்றும் வறட்சியால் ஏற்படும் பாதிப்புக்கு இழப்பீடு பெற முடியும். பயிர் காப்பீடு செய்ய விரும்பும் விவசாயிகள், தங்கள் நிலத்தின் சிட்டா, அடங்கல், வங்கிக் கணக்கு புத்தக நகல், ஆதார் அட்டை நகல் உள்ளிட்ட ஆவணங்களுடன் பொது இசேவை மையங்கள், வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் பொதுத்துறை வங்கிகளில் விண்ணப்பிக்கலாம். விவசாயிகள் தங்களின் பிரீமிய தொகையாக சின்ன வெங்காயம்பயிருக்குரூ.2,227ஐ அடுத்த ஆண்டு ஜனவரி 31ந் தேதிக்குள் செலுத்த வேண்டும்.

இழப்பீடாக ஏக்கருக்கு ரூ.44,550 வரை கிடைக்கும். வாழைக்கு ஏக்கருக்கு ரூ.4,900ஐ அடுத்த ஆண்டு பிப்ரவரி 29ந் தேதிக்குள் செலுத்த வேண்டும். இதற்கு ஏக்கருக்கு ரூ. 98 ஆயிரம் வரை இழப்பீடாக கிடைக்கும். மேலும் விவரம் தேவைப்படுவோர் 7708328657, 9095630870 என்ற செல்போன் எண்களில் தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

# வேலை நிறுத்த போராட்டம் ஓ.இ., ஸ்பின்னிங் மில் சங்கம் ஆதரவு

மங்கலம்,செப்.25

திருப்பூர், கோவை மாவட்டத்தில் 500க்கும் மேற்பட்ட ஓ.இ.மில்கள் இயங்கி வருகின்றன. மின் நுகர்வோர் கூட்டமைப்பு சார்பில் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்யப்படவுள்ளது.

திருப்பூர், கோவை மாவட்ட சிறு ஓ.இ.ஸ்பின்னிங் மில் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் ரகுபதி கூறுகையில்,

திருப்பூர், கோவை மாவட்டத்தில் 500க்கும் மேற்பட்ட ஓ.இ.மில்கள் இயங்கி வருகின்றன.

ஒரு நாளைக்கு ரூ.25கோடி மதிப்பிலான நூல்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் கடந்த 12 மாதங்களுக்கு முன்பு உயர்த்தப்பட்ட மின் கட்டணத்தை திரும்ப பெற வலியுறுத்தி நாளை 25ந்தேதி தமிழக அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தமிழ்நாடு தொழில்முறை மின் நுகர்வோர் கூட்டமைப்பு சார்பில் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்யப்படவுள்ளது.

இந்த ஒருநாள் வேலை நிறுத்தப்போராட்டத்தில் திருப்பூர், கோவை மாவட்ட ஓ.இ.ஸ்பின்னிங் மில் சங்கம் ஆதரவு தெரிவித்து வேலை நிறுத்தப்போராட்டத்தில் பங்கேற்கிறது.

தமிழக முதல்வர் ஓ.இ. மில்களுக்கு உயர்த்தப்பட்ட மின் கட்டணத்தை திரும்ப பெற்று, தமிழகம் முழுவதும் உள்ள சிறு ஓ.இ. மில் நூற்பாலைகளை பாதுகாத்திட போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# சரக அளவிலான போட்டிகளில் ஸ்டான்லி பள்ளி மாணவர்கள் சாதனை

பாப்பிரெட்டிப்பட்டி, செப். 25

சரக அளவிலான போட்டிகளில் ஸ்டான்லி பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டு சாதனை படைத்தனர். வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

சரக அளவில் நடைபெற்று வரும் விளையாட்டு போட்டிகளில் ஸ்டான்லி மெட்ரிகுலேஷன் பள்ளி மாணவர்கள் பங்கேற்று வெற்றி பெற்றுள்ளனர். பல்வேறு அரசு மற்றும் தனியார் பள்ளிகள் கலந்து கொண்ட இப்போட்டியில் வயது வரம்பு அடிப்படையில் வளையபந்து, மேசைப்பந்து மற்றும் இறகுப்பந்து போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளனர். சரக அளவில் நடைபெற்ற வளையப்பந்து போட்டியில் ஆண்கள் பிரிவில் U14 இரட்டையர் பிரிவில் அஜய்ஜோதி மற்றும் துர்காபிரசாந்த் முதலிடமும், U17 ஒற்றையர் பிரிவில் தண்டபாணிமுதலிடமும், இரட்டையர் ஆண்கள் பிரிவில் தண்டபாணி மற்றும் ஜெயக்குமார்முதலிடமும் பிடித்து வெற்றி பெற்றுள்ளனர்.



இறகுப்பந்து போட்டியில் U14 ஆண்கள் இரட்டையர் பிரிவில் சபரி மற்றும் ஹரிபிரகாஷ் முதலிடமும், U17 ஆண்கள் இரட்டை யர் பிரிவில் கிஷோர் மற்றும் ஸ்ரீநிதிஷ் இரண்டா மிடமும், U19 ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சாணக்கி யன்முதலிடமும், இரட்டையர் பிரிவில் சாணக்கியன் மற்றும் மோகித் முதலிடமும் பெற்று வெற்றி பெற்றுள்ளனர். U19 பெண்கள் ஒற்றையர்பிரிவில்தர்ஷினிஸ்ரீ முதலிட மும், இரட்டையர்பிரிவில்தர்ஷினிஸ்ரீமற்றும்ஷிவானி முதலிடமும் பெற்று வெற்றி பெற்றுள்ளனர். மேசைப்பந்து போட்டியில் U 14 ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ராம்கிஷோர்முதலிடமும், இரட்டையர் பிரிவில் ராம்கிஷோர் மற்றும் கீர்த்திவாசன்முதலிடமும், U 19 ஆண்கள் ஒற்றையர் பிரிவில் கெவின் இரண்டாமிடமும், இரட்டையர் பிரிவில் கெவின் மற்றும் இஜாஸ் முதலிடமும் பிடித்து வெற்றி பெற்றுள்ளனர். U 14 பெண்கள் ஒற்றையர் பிரிவில் மிஸ்பா முதலிடமும், இரட்டையர் பிரிவில் மிஸ்பா மற்றும்ஆயிஷாமுதலிடமும், U17 பெண்கள் ஒற்றையர் பிரிவில் சுமித்ரா முதலிடமும், இரட்டையர் பிரிவில் சுமித்ரா மற்றும் அட்ஷயா முதலிடமும், U 19 பெண்கள் ஒற்றையர் பிரிவில் தமிழ்மதி முதலிடமும், இரட்டையர் பிரிவில் தமிழ்மதி மற்றும் வர்ஷா முதலிடமும் பிடித்து வெற்றி பெற்றுள்ளனர். வெற்றி பெற்ற மாணவர்களையும், பயிற்சி அளித்த உடற்கல்வி ஆசிரியர்கள் சத்யராஜ், ஆனந்த குமார் மற்றும் சங்கீதா ஆகியோரை பள்ளியின தாளாளர் முருகேசன், செயலாளர்பிரூஷநந்தபிரகாஷ் மற்றும் ஆசிரியர்கள் வாழ்த்துக்களை தெரிவித்தனர். மேலும் இப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் மாவட்ட அளவிலான போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கருணாநிதி எவ்வாறு முதல்வர் பதவியை அடைந்தார் என்று உதயநிதிக்கு தெரியாது: முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் பேச்சு

திண்டுக்கல், செப். 25

கருணாநிதி, மு.க.ஸ்டாலினால்தான் தி.மு.க. வளர்ந்தது என உதயநிதி நினைத்துக் கொண்டுள்ளார். 1972ல் அ.தி.மு.க.வை எம்.ஜி.ஆர். உருவாக்கி இந்த இயக்கத்தை வெற்றி இயக்கமாக மாற்றினார்.



ஒட்டன்சத்திரத்தில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாள் பொதுக்கூட்டம் தொப்பம்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் அப்பன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் சிறப்புரையாற்றி பேசியதாவது: பேரறிஞர் அண்ணா 1952ல் தி.மு.க.வை ஆரம்பித்த போது கடும் சோதனைகளுக்கு ஆளானார். காங்கிரசை எதிர்த்து 15 எம்.எல்.ஏ.க்களை வெற்றி பெறவைத்தார். 1957ல் 50 எம்.எல்.ஏ.க்களை பெற முடிந்தது. கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் ஆண்ட காங்கிரசை எதிர்த்து 1967ல் தேர்தல் வந்த போது பஞ்சம் தலைவிரித்தாடியது. அண்ணாவுக்காக எம்.ஜி.ஆர். பிரசாரம் செய்தார். குண்டடிபட்ட எம்.ஜி.ஆரின் கழுத்தில் மப்ளருடன் உள்ள போஸ்டர் தமிழகம் முழுவதும் ஒட்டப்பட்டது. இதனால் அண்ணா வெற்றிபெற்று முதல்வர் ஆனார். அண்ணாவுக்கு மரியாதை செலுத்த வந்த அதிகாரிகளிடம்முதலில்வெற்றிக்கு காரணமான எம்.ஜி.ஆருக்கு நன்றி சொல்லுங்கள் என கூறினார். அந்த பெருந்தன்மை அவரைத் தவிர வேறு யாருக்கும் வராது. அண்ணா மறைவுக்கு பின்பு நாவலர் நெடுஞ்செழியன் முதல்அமைச்சராக வந்திருக்க வேண்டும். குறுக்கு வழியில் முதல்அமைச்சர் பதவியை பிடித்தவர் கருணாநிதி. இந்த வரலாறு உதயநிதிக்கு தெரியாது. கருணாநிதி, மு.க.ஸ்டாலினால்தான் தி.மு.க. வளர்ந்தது என உதயநிதி நினைத்துக் கொண்டுள்ளார். கருணாநிதி முதல்வரான பிறகு 3 வருடங்களில் லஞ்சம் தலைவிரித்தாடியது. அதன் பிறகு 1972ல் அ.தி.மு.க.வை எம்.ஜி.ஆர். உருவாக்கி இந்த இயக்கத்தை வெற்றி இயக்கமாக மாற்றினார். எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும் தமிழகத்தில் நல்லாட்சி நடத்தினர். அதன் பிறகு எடப்பாடி பழனிசாமி நல்லாட்சியைத் தொடர்ந்து குடிமராமத்து நாயகனாக போற்றப்பட்டார். ஆனால் தற்போதைய முதல்அமைச்சர் ஸ்டாலின்அ.தி.மு.க.வில் அறிவிக்கப்பட்ட பல மக்கள் நலத் திட்டங்களுக்கு மூடு விழா நடத்தியுள்ளார். தி.மு.க. ஆட்சியில் கடந்த 29 மாதங்களில் ரூ.3 லட்சம் கோடி கடன் வைத்துள்ளனர். இந்தியாவிலேயே அதிக கடன் வைத்துள்ள மாநிலம் தமிழ்நாடுதான். தி.மு.க. ஆட்சி மீது மக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர். இந்த அதிருப்தியை திசை திருப்ப சனாதனத்தை கையில் எடுத்துள்ளனர். இந்துக்களை ஒழித்து விட்டு சிறுபான்மையினர் ஆதரவை பெற்று விடலாம் என தி.மு.க.வினர் கனவு காண்கின்றனர். அனைத்து மதத்தினருக்கும் உற்ற நண்பனாக விளங்குவது அ.தி.மு.க.தான். தற்போது டெல்டா மாவட்டங்களில் பயிர்கள் கருகி வரும் நிலையில் காவிரி நீரை பெற்றுத் தர முடியாத நிலையில் முதல் அமைச்சர் ஸ்டாலின் உள்ளார். இண்டியா கூட்டணியில் இடம் பெற்றுள்ள காங்கிரஸ் முதல்வரிடம் காவிரி நீரை பெற முடியாத ஸ்டாலினால் மக்கள் எதிர்ப்பை சந்திக்க முடியவில்லை. விரைவில் இந்த ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

# தனியார் வேலைவாய்ப்பு முகாம் பணியில் முழு ஈடுபாட்டுடன் வாழ்வில் வெற்றி பெற வேண்டும்: அமைச்சர்எ.வ.வேலு பேச்சு

கள்ளக்குறிச்சி, செப். 25

முகாமில் கலந்து கொண்ட அனை வரும் உங்கள் வாழ்வில் ஒருஇலக்கினை வைத்துக் கொள்ள வேண்டும். பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

கள்ளக்குறிச்சி தனியார் பள்ளியில் வளாகத்தில் கருணாநிதியின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, மாவட்டவேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும்மையம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக, நகர்புற வாழ்வாதார இயக்கம்இணைந்து நடத்திய மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது.முகாமிற்கு மாவட்ட கலெக்டர் ஷ்ரவன் குமார் தலைமை தாங்கினார். ரிஷிவந்தியம் தொகுதி எம்.எல்.ஏ. வசந்தம் கார்த்திகேயன், சங்கராபுரம் எம்.எல்.ஏ. உதயசூரியன், உளுந்தூர்பேட்டை எம்.எல்.ஏ. மணிக்கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மண்டல வேலை வாய்ப்பு இணை இயக்குநர் லதா அனைவரையும் வரவேற்றார். முகாமில் பொதுப்பணிகள் நெடுஞ் சாலைகள் மற்றும்சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கூறியதாவது: வேலை வாய்ப்பு அலு வலகத்தில் பதிவு செய்து, ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் பதிவினை புதுப்பிக்க வேண்டும். இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு முதல்அமைச்சர்தற்போது இத்துறைக்குதிறன் மேம்பாட்டுத்துறை வேலை வாய்ப்பு அலுவலகம் என பெயர் சூட்டியுள்ளார்கள். படித்த அனைத்து இளைஞர் களுக்கும் அரசு



வேலை வழங்க இயலாது என்பதனால், தமிழ்நாட்டில் உள்ள இளைஞர்களின் திறனை மேம்படுத்தி, வேலை வாய்ப்பை வழங்கிட வேண்டும் என்பதற்காகத்தான் இத்தகைய தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப் படுகின்றன. இந்த முகாமில் கலந்து கொண்ட அனை வரும் உங்கள் வாழ்வில் ஒருஇலக்கினை வைத்துக் கொள்ள வேண்டும். இலக்கினை அமைத்துக் கொண்டு வாழ்ந்தால்தான் உழைக்கும் எண்ணம் வரும். எனவே, இம்முகாமில் பணி நியமன ஆணை பெறும் அனைவரும் தங்கள் பணியில் முழு ஈடுபாட்டுடன் இருந்து வாழ்வில் வெற்றிபெற வேண்டும் இவ்வாறு அவர் பேசினார்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் கூறியதாவது: தமிழ்நாடு முதலஅமைச்சர் தமிழ்நாட்டில் உள்ள படித்த அனைத்து இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்பு உருவாக் கிட வேண்டும் என்ற நோக் கத்தில், செயல்படுத்திய திட்டம் தான் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம். கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 100 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி கள்ளக்குறிச்சி மாவட் டத்தில் இன்று நடைபெறும் 41 வது தனியார் வேலை வாய்ப்பு முகாம். இன்று நடைபெறும் வேலை வாய்ப்பு முகாமில் 150 க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டுள்ளது. இளைஞர்கள் தாங்கள் விரும்பிய எந்த நிறுவனத்தில் வேண்டுமானாலும் பதிவு செய்யலாம். இளைஞர்கள் தங்கள் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு சரியான வேலையை தேர்ந்தெடுக்க வேண்டும். தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் இதுபோன்ற வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படும். தனியார் துறைகளில் அதிக அளவில் வேலை வாய்ப்புகள் இருக்கின்றன. இளைஞர்கள் தன்நம்பிக்கையுடனும், விடாமுயற்சியுடனும் செயல்பட வேண்டும். போராட்டங்கள் இல்லாமல் வாழ்க்கையில் வெற்றிகள் இல்லை, தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றுங்கள். முடியாது என்பது உலகில் இல்லை, வெற்றி என்பதும் வெகு தொலைவில் இல்லை. எட்டும் தூரத்தில் தான் இருக்கிறது. கடினமாக உழைத்தால் வெற்றி நிச்சயம், அலட்சியமான மனிதன் வாழ்க்கையில் வெற்றி பெற்றதாகசரித்திரம் இல்லை எனவே இளைஞர்கள் அனைவரும் வேலை வாய்ப்பை பெற்று வாழ்வில்வெற்றி பெற வேண்டும் . இவ்வாறு அவர் பேசி னார். தொடர்ந்து அமைச் சர்கள் பணி நியமனம் செய்யப்பட்ட இளைஞர் களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினர். இந்த முகாமில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து 152 முன்னனி தனியார் துறை நிறுவனங்கள் கலந்து கொண்டன. மாவட்டம் முழுவதும் இருந்து 16 மாற்றுத்திறனாளிகள், 4,520 பெண்கள் உட்பட 10,132 வேலைநாடுநர்கள் கலந்து கொண்டனர். இதில் 338 பெண்கள்மற்றும் 9 மாற்றுத்திறனாளிகள் உட்பட 1021 வேலை நாடு நர்கள் தேர்வு செய்யப்பட்டு உள்ளனர். 64 நபர்கள் திறன் பயிற்சிக்கு பதிவு செய்தனர். இதில் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு மோகன்ராஜ், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் புவனேஸ்வரி பெருமாள், மாவட்ட வருவாய் அலுவலர் சத்திய நாராயணன், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் மாவட்ட திட்ட இயக்குநர் சுந்தர்ராஜன், துணை இயக்குநர் மணி, உதவி இயக்குநர்பாலமுருகன், ஏ.கே.டி மேல்நிலைப்பள்ளி தாளாளர் மகேந்திரன், அனைத்து உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் முரளிதரன் நன்றி கூறினார்.

# கன்னியாகுமரியில் சுற்றுலா பயணிகள் குவிந்ததால் மீண்டும் களை கட்டிய கடற்கரை

கன்னியாகுமரி, செப். 25

கன்னியாகுமரிக்கு சுற்றுலா பயணிகள் வருகை அதிக அளவில் காணப்படுகிறது. இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாளான இன்று கன்னியாகுமரிக்கு சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்து உள்ளது. குறிப்பாக கேரளா மற்றும் வடமாநில சுற்றுலா பயணிகள் வருகைஅதிகரித்துகாணப்பட்டது. விவேகானந்தர் நினைவு மண்டபத்தை படகில் சென்று பார்ப்பதற்காக அதிகாலையிலேயே படகுத்துறையில் சுற்றுலா பயணிகள் காத்திருந்தனர். காலை 8 மணிக்கு படகு போக்குவரத்து தொடங்கியது. சுமார் 3 மணி நேரம் படகு துறையில் சுற்றுலா பயணிகள்காத்திருந்து படகில் பயணம் செய்து விவேகானந்தர் நினைவு மண்டபத்தை பார்வையிட்டு திரும்பினர். மேலும் திருப்பதி வெங்கடாஜலபதி கோவில், விவேகானந்த கேந்திர வளாகத்தில் அமைந்துள்ள பாரத மாதா கோவில் ராமாயண தரிசன சித்திர கண்காட்சி கூடம், காந்தி நினைவு மண்டபம், காமராஜர் மணிமண்டபம், அரசு அருங்காட்சியகம், கலங்கரை விளக்கம், மீன்காட்சி சாலை, அரசு பழத்தோட்டம் சுற்றுச்சூழல் பூங்கா வட்டக்கோட்டை பீச் உள்பட அனைத்து சுற்றுலா தளங்களிலும் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அலைமோதியது. சுற்றுலா பயணிகள் வருகை "திடீர்"என்று அதிகரித்ததால் கடற்கரையில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது.



கடலோர பாதுகாப்பு குழும போலீசார், சுற்றுலா போலீசார் மற்றும் உள்ளூர் போலீசார் இந்த பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். 25 நாட்களுக்கு பிறகு வட்டக்கோட்டைக்கு உல்லாச படகு போக்குவரத்து நேற்று நடந்தது. நேற்று ஒரே நாளில் 50 உள்ள பயணிகள் மட்டுமே படையில் வட்டக்கோட்டைக்கு உல்லாச படகு சவாரி செய்தனர். இன்று காலையிலும் வட்டக்கோட்டைக்கு உல்லாச படகு சவாரி இயக்கப்பட்டது.

# மரவள்ளி கிழங்கு விலை வீழ்ச்சி

வேலாயுதம்பாளையம், செப். 25

கரூர் மாவட்டம் வேட்டமங்கலம், குளத்து பாளையம், குந்தாணி பாளையம், ஓலப்பாளையம், ஓரம்புப்,பாளையம், நல்லிக்கோவில், பழமாபுரம் ,புன்னம் சத்திரம், பேச்சிப்பாறை, நடையனூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் விவசாயிகள் மரவள்ளி கிழங்குகளை பயிரிட்டுள்ளனர். 10 மாதங்களில் மரவள்ளிக்கிழங்கு விளைந்தவுடன் உள்ளூர் பகுதிக்கு வரும் தரகர்கள் மூலம் மரவள்ளிக்கிழங்குகளை டன் கணக்கில் விற்பனை செய்து வருகின்றனர் . மரவள்ளிக்கிழங்குகளை வாங்கிய புரோக்கர்கள் புதுச்சத்திரம், நாமகிரிப்பேட்டை, புதன்சந்தை, மல்லூர், கீரனூர்,சின்னசேலம்,ஆத்தூர்,மல வேப்பங்கொட்டைஉள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் செயல்பட்டு வரும் ஜவ்வரிசி தயாரிக்கும் மில்களுக்கு அனுப்பி வைக்கின்றனர் . வாங்கிய மரவள்ளி கிழங்குகளை ஜவ்வரிசி தயாரிக்கும் மில் அதிபர்கள் பல ரக ஜவ்வரிசி களாகவும், கிழங்கு மாவு போன்றவைகளை தயார் செய்கின்றனர் . மரவள்ளிக்கிழங்கில் உள்ள ஸ்டார்ச் சத்து அடிப்படையில் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது .

அதே போல் ஜவ்வரிசி விலை உயரும் போதும், விலை வீழ்ச்சி அடையும் போதும் சேகோசர்வ் மூலம் மரவள்ளி கிழங்குகளுக்கு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

கடந்த வாரங்களில் மரவள்ளிக்கிழங்கு ஜவ்வரிசி தயாரிக்கும் மில் அதிபர்கள் 1 டன் ரூ.15,500 க்கு வாங்கிச் சென்றனர்.சிப்ஸ் தயாரிப்பவர்கள் 1 டன் மரவள்ளிக்கிழங்கை ரூ.16,500க்கு வாங்கிச் சென்றனர் .

நேற்று ஜவ்வரிசி தயாரிக்கும் அதிபர்கள் 1 டன் மரவள்ளி கிழங்கு ரூ.12,000க்கு வாங்கிச் சென்றனர். சிப்ஸ் தயாரிப்பவர்கள் ரூ.13 ஆயிரத்து 500 க்கு வாங்கிச்சென்றனர். மரவள்ளி கிழங்கு உற்பத்தி அதிகரிப்பின் காரணமாக மரவள்ளி கிழங்கு விலை வீழ்ச்சி அடைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

# திருடிய நகைகளை திருப்பி வைக்காததால் கோவில் சூலாயுதத்தில் சேவலை குத்தி பரிகாரம்

கோபி, செப்.25

புகாரின் பேரில் சிறுவலூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து நகை மற்றும் பணத்தை திருடி சென்ற மர்ம நபர்களை வலைவீசி தேடி வருகின்றனர். சம்பவம்அப்பகுதியில்மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டி பாளையம் அருகே உள்ள வெள்ளாங்கோவிலை சேர்ந்தவர் ராமசாமி. கடந்த 15ந் தேதிவீட்டைபூட்டிவிட்டு அதன் சாவியை வழக்கம் போல் மாடிப்படி அருகே உள்ள மறைவான இடத்தில் வைத்து விட்டு வெளியூர் சென்றுவிட்டார். பின்னர் 16ந் தேதி வந்து பார்த்தபோது வீட்டின் சாவி அருகில் உள்ள வீட்டின் பகுதியில் கிடந்தது கண்டு அதிர்ச்சி அடைந்தார். இதைத்தொடர்ந்து அவர் சாவியை எடுத்து வீட்டின் உள்ளே சென்று பீரோவை திறந்து பார்த்தார். அப்போது பீரோவில் வைக்கப்பட்டிருந்த 18 பவுன் நகை மற்றும் ரூ.3 ஆயிரம் கொள்ளை போனதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். இதுகுறித்த புகாரின் பேரில் சிறுவலூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து நகை மற்றும் பணத்தை திருடி சென்ற மர்ம நபர்களை வலைவீசி தேடி வருகின்றனர். இந்நிலையில் வீட்டில் கொள்ளை அடிக்கப்பட்ட பணம், நகை கிடைக்காத நிலையில் வெள்ளாங்கோயில் பகுதியில் நகை மற்றும் பணத்தை எடுத்தவர்கள் யாராக இருந்தாலும் அதனை அங்கேயே வைத்து விடும்படியும், இல்லையென்றால் (இன்று) வெள்ளாங்கோவில் பகுதியில் உள்ள மாகாளியம்மன் கோவிலில் கோழி குத்தி பரிகாரம் செய்யப் போவதாகவும் இந்த பரிகாரம் செய்யும் போது பணம், நகை எடுத்தவர்கள் குடும்பமே கடும் பாதிப்புக்கு உள்ளாகும் எனவும், இதனை தவிர்க்க வீட்டில் இருந்த பணம், நகை எடுத்தவர்கள் கொண்டுவந்துஅங்கேயே வைக்குமாறு பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் பிளக்ஸ் பேனர் அடித்து வீட்டின் முன்புள்ள சாலையில் வைத்தனர். இதனால் அந்த பகுதியில் பரபரப்பு நிலவியது. அப்பகுதி மக்கள் இந்த பேனரை ஆச்சரியத்துடன் பார்த்து சென்றனர்.

இந்நிலையில் திருடிய நகை வைக்கப்படாததால் பாதிக்கப்பட்ட குடும்பத்தை சேர்ந்தவர்கள் பேனரில் கூறியவாறு மாங்காளியம்மன் கோவில் முன்பு வைக்கப்பட்டிருந்த சூலாயுதத்தில் இன்று சேவலை குத்தி பரிகாரம் செய்துள்ளனர். இந்த சம்பவம் அப்பகுதியில் மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# புரட்டாசி மாதம் முதல் சனிக்கிழமையை யொட்டி பெருமாள் கோவில்களில் சிறப்பு பூஜைகள்

கிருஷ்ணகிரி, செப். 25

கிருஷ்ணகிரி மாவட்ட பெருமாள் கோவில்களில் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புரட்டாசி மாதத்தில் பெருமாளை வணங்கும் பக்தர்கள் விரதமிருப்பது வழக்கம்.

இந்த ஆண்டு புரட்டாசி மாதம் கடந்த 18ந் தேதி தொடங்கியது. நேற்று புரட்டாசி முதல் சனிக்கிழமையை முன்னிட்டு மாவட்டத்தில் பெருமாள் கோவில்களில் சிறப்புபூஜைகள் நடந்தன. அதன்படி, நேற்று புரட்டாசி மாதம் முதல் சனிக்கிழமை என்பதால் பெருமாள் கோயில்களில் சிறப்பு பூஜைகள் நடந்தது. அதன்படி, கிருஷ்ணகிரி அடுத்த கணவா ய்ப்பட்டியில் உள்ள பிரசித்தி பெற்ற பெருமாள் கோயிலில் நேற்று காலை சுவாமிக்கு சிறப்பு பூஜைகள் நடந்தது. கோயிலுக்கு கிருஷ்ணகிரி, தருமபுரி உட்பட பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராள மான பக்தர்கள் வந்தி ருந்தனர். சுவாமி சிறப்பு அலங்காரத்தில் பக்தர்க ளுக்கு அருள்பாலித்தார்.

இதில் ஆயிரக்க ணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமியை தரிசனம் செய்தனர். சிறப்பு பேருந்து கள் இயக்கப்பட்டது.

இதே போல், வேலம்பட்டி அருகே பெரிய மலை கோயில், 50 அடி உயர மலை உச்சியில் உள்ள ஐகொந்த ம்கொத்தப்பள்ளி சீனிவாச பெருமாளுக்கு சிறப்பு பூஜைகள் நடந்தது. இதில், ஆயிரக்கணக்கான பக்தர்கள் மலை மேல் உள்ள சீனிவாச பெருமா ளை வழிபட்டனர். மூலவர் சீனிவாச பெருமாளுக்கும், உற்சவ மூர்த்திக்கும் மலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டிருந்தது.

சனிக்கிழ மையினை யொட்டி கிருஷ்ணகிரி 5 ரோடு ரவுண்டானா பகுதி மற்றும் மார்கெட் சாலையோரம் பூக்கள் மற்றும் பூமாலைகள் அதிக அளவில் விற்பனையானது. ஒரு முழம் சாமந்தி பூ ரூ. 30 வரை விற்பனை செய்யப்பட்டது. இதே போல் செண்டுமல்லி, மல்லி பூ உள்ளிட்ட பல்வேறு வகையான பூக்கள், பூஜை பொருட்கள் விற்பனை அதிகரித்து காணப்பட்டது. கிருஷ்ணகிரி, ஓசூர் உட்பட மாவட்டத்தின் அனைத்து பெருமாள் கோயில்களிலும் நேற்று சிறப்புபூஜைகள்நடந்தன. அதிகாலையிலேயே சாமிக்கு சிறப்பு பூஜைகள், தீபாராதனைகள் நடந்தன. இதில் ஏராளமான பக்தர்கள்கலந்து கொண்டு பெருமாளை தரிசனம் செய்தனர்.

அதே போல கனவாய்ப்பட்டி பெருமாள் கோவில் உள்பட பல்வேறு கோவில்களில் பக்தர்கள் மொட்டை போட்டுக் கொண்டு தங்களின் நேர்த்திக்கடனைசெலுத்தினார்கள். நேற்று முதல் புரட்டாசி சனி என்பதால் வழக்கத்தை காட்டிலும் அதிகமான பக்தர்கள் கூட்டம் காணப்பட்டது. மேலும் வீடுகளிலும் காலையிலேயே பொது மக்கள் குளித்து, பெருமாளை வழிபட்டனர்.

# தொட நெருங்கிட முடியாதே.. ஹூக்கும் பாடல் வீடியோ வெளியானது




நெல்சன் இயக்கத்தில் வெளியான திரைப்படம் ‘ஜெயிலர்’. இப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது.

நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் ரஜினி நடிப்பில் வெளியான திரைப்படம் 'ஜெயிலர்'. இப்படம் விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றது. இந்த படத்தில் மலையாள நடிகர் மோகன்லால், கன்னட நடிகர் சிவராஜ்குமார், ரம்யா கிருஷ்ணன், யோகிபாபு, வசந்த் ரவி, விநாயகன் உள்ளிட்ட திரைப்பிரபலங்கள் பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தனர். சன் பிக்சர்ஸ் நிறுவனம்தயாரித்திருந்தபடத்திற்குஅனிருத்இசையமைத்திருந்தார்.இப்படத்தின் பாடல்கள் மற்றும் பின்னணி இசை சமூக வலைதளத்தில் பட்டையை கிளப்பி வருகிறது. இந்நிலையில், 'ஜெயிலர்' படத்தில் இடம்பெற்றிருந்த 'ஹுக்கும்' பாடலின் வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது. இந்த வீடியோ பாடலுக்கு ரசிகர்கள் வைப் செய்து வருகிறார்கள்.

# பாலா பெரும் அதிர்வை ஏற்படுத்தும் கதையைத் தொட்டிருக்கிறார் சுரேஷ் காமாட்சி

இயக்குனர் பாலா தற்போது இயக்கி வரும் திரைப்படம் 'வணங்கான்'. அருண் விஜய்கதாநாயகனாகநடிக்கும்இந்தப்படத்தில், ரோஷினிபிரகாஷ்கதாநாயகியாக நடிக்கிறார். மேலும், சமுத்திரக்கனி, மிஷ்கின்முக்கியகதாபாத்திரத்தில்நடிக்கிறார். வி ஹவுஸ் ப்ரோடக்ஷன்ஸ் மற்றும் பி ஸ்டூடியோஸ் தயாரிக்கும் இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைக்கிறார். கவிப்பேரரசு வைரமுத்து பாடல்களை எழுதுகிறார். ஆர்.பி.குருதேவ் ஒளிப்பதிவு செய்கிறார். இப்படத்தின்படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதையடுத்து இப்படத்தின்ஃபர்ஸ்ட்லுக் போஸ்டர் இன்று வெளியானது. ஒரு கையில் பெரியாரும் மற்றொரு கையில் விநாயகரும் இருக்கும் இந்த போஸ்டரை ரசிகர்கள் வைரலாக்கி வருகின்றனர். இந்நிலையில், இந்த போஸ்டர்குறித்து இயக்குனர்சுரேஷ்காமாட்சி பதிவு ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில், "இங்கு காலத்தை வெல்வது முக்கியம். நம் முன்னே எத்தனை சமர் வரினும் நின்று எதிர்கொண்டு இன்று தனக்கென படைப்பாற்றலில் மிகச்சிறந்த இடத்தைதக்கவைத்திருக்கும்நம்தமிழ்சினிமாவின்வரம், இயக்குனர் அண்ணன் பாலா அவர்கள். அவரது இதுவரையிலான படைப்புகள் மக்கள் மத்தியில் அதிர்வுகளை உருவாக்கியுள்ளன. அதேபோல இன்று வணங்கான் படத்தின் முதல் பார்வை வெளியாகி உள்ளது. பெரும் அதிர்வை ஏற்படுத்தும் ஒரு கதையைத் தொட்டிருக்கிறார்என்பது மட்டும்நிச்சயம். சகோதரர்அருண்விஜய்க்கு இது மற்றுமொரு பெயர் சொல்லும் அவதாரம். இனி உங்கள் கோணத்திற்கே விட்டுவிடுகிறேன்" என்று பதிவிட்டுள்ளார்.

# ஒரு கையில் பெரியார்.. மற்றொரு கையில் விநாயகர் வைரலாகும் வணங்கான் போஸ்டர்




சேது, நந்தா, பிதாமகன், நான் கடவுள், அவன் இவன் உள்ளிட்ட பல படங்களை இயக்கிய பாலா, தற்போது 'வணங்கான்' என்ற படத்தை இயக்கிவருகிறார். அருண் விஜய் கதாநாயகனாக நடிக்கும் இந்தப் படத்தில், ரோஷினி பிரகாஷ் கதாநாயகியாக நடிக்கிறார். மேலும், சமுத்திரக்கனி, மிஷ்கின் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். ஜி.வி.பிரகாஷ் இசையமைக்கும் இப்படத்திற்கு கவிப்பேரரசு வைரமுத்து பாடல்களை எழுதுகிறார். ஆர்.பி.குருதேவ் ஒளிப்பதிவு செய்ய, சில்வா இந்த படத்திற்கு ஆக்ஷன் காட்சிகளைக் கையாண்டுள்ளார். இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. வணங்கான் போஸ்டர் இதையடுத்து 'வணங்கான்' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் இன்று காலை வெளியாகும் என படக்குழு அறிவித்திருந்தது. அதன்படி, இப்படத்தின் போஸ்டர் வெளியாகியுள்ளது. அருண் விஜய் ஒரு கையில் பெரியார் மற்றும் இன்னொரு கையில் விநாயகர் வைத்துள்ள இந்த போஸ்டரை ரசிகர்கள் வைரலாக்கி வருகின்றனர்.







# 'சந்திரமுகி 2' படத்தின் 480 ஷாட்களை காணவில்லை பி.வாசு கொடுத்த ஷாக்



’சந்திரமுகி 2’ திரைப்படம் 28 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இப்படத்தை இயக்குனர் பி.வாசு இயக்கியுள்ளார்.

இயக்குனர் பி.வாசு இயக்கத்தில் பிரமாண்டமாக உருவாகி இருக்கும் திரைப்படம் 'சந்திரமுகி 2'. இப்படத்தில் ராகவா லாரன்ஸ் கதாநாயகனாக நடித்துள்ளார். கங்கனா ரனாவத் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் வடிவேலு, ராதிகா உள்ளிட்ட பல திரைப்பிரபலங்கள் இதில் நடித்திருக்கின்றனர். லைகா நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு எம்.எம் கீரவாணி இசையமைத்துள்ளார். '

சந்திரமுகி 2' திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் செப்டம்பர் 28ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. '

சந்திரமுகி 2' திரைப்படத்தின் ரிலீஸ் தேதி செப்டம்பர் 15யிலிருந்து 28ஆம் தேதிக்கு மாற்றி வைக்கப்பட்டது குறித்து இயக்குனர் பி.வாசு விளக்கமளித்துள்ளார். அவர்கூறியதாவது, 'சந்திரமுகி 2' திரைப்படத்தின் Final Copyஐ கடந்த 8ஆம் தேதி பார்க்க முடிவு செய்திருந்தோம். அன்று படத்தின் 480 ஷாட்களை காணவில்லை என அழைப்பு வந்தது. இப்படியெல்லாம் நடக்குமா என மனதில் தோன்றியது. பின்னர் 4,5 நாட்கள் தீவிரமாக தேடி காணாமல் போன ஷாட்களை கண்டுபிடித்தோம். இதனால் தான் ரிலீஸ் தேதி தள்ளிப்போனது என்று பேசினார்.



# ஆஸ்திரேலியாவிற்கு எதிரான 2வது ஒரு நாள் போட்டி: 99 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா அபார வெற்றி



இந்தியா, ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 2வது ஒருநாள் போட்டி இந்தூரில் இன்று நடைபெற்று வருகிறது. டாஸ் வென்ற ஆஸ்திரேலிய அணி கேப்டன் ஸ்மித் பந்து வீச்சை தேர்வு செய்தார். அதன்படி, இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக ருதுராஜ் கெயிக்வாட், சுப்மன் கில் களமிறங்கினர். அணியின் எண்ணிக்கை 16 ஆக இருக்கும்போது ருதுராஜ் 8 ரன்னில் ஆட்டமிழந்தார். அடுத்து இறங்கிய ஷ்ரேயாஸ் அய்யர் சுப்மன் கில்லுடன் இணைந்து அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இந்திய அணி 9.5 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 79 ரன்கள் எடுத்திருந்த நிலையில் மழை பெய்ததால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. சுப்மன் கில், ஷ்ரேயஸ் அய்யர் ஜோடியைப் பிரிக்க முடியாமல் ஆஸ்திரேலிய அணியினர் திணறினர். இருவரும் கிடைத்த பந்துகளை சிக்சர், பவுண்டரிகளாக விளாசினர். சுப்மன் கில், ஷ்ரேயஸ் அய்யர் ஆகியோர் சதமடித்து அசத்தினர். ஷ்ரேயஸ் அய்யர் 86 பந்துகளில் 3 சிக்சர், 10 பவுண்டரிகள் உள்பட சதமடித்தார். அவர் 105 ரன்னில் அவுட்டானார். இது இவரது 3வது ஒருநாள் சதமாகும். சுப்மன் கில் 92 பந்துகளில் 4 சிக்சர், 6 பவுண்டரி உள்பட சதமடித்து அசத்தினார். அவர் 104 ரன்னில் ஆட்டமிழந்தார். 2வது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த இவர்கள் 200 ரன்கள் குவித்தனர். இஷான் கிஷன் 31 ரன்னில் வெளியேறினார். தொடர்ந்து ஆடிய கேப்டன் கே.எல்.ராகுல், சூர்யகுமார் யாதவ் ஜோடியில் சிக்சர், பவுண்டரிகளாக அடித்தனர். ராகுல் அரை சதமடித்து 52 ரன்னில் அவுட்டானார். கேமரூன் கிரீன் வீசிய 43வது ஓவரில் சூர்யகுமார் யாதவ் தொடர்ந்து 4 சிக்சர்கள் அடித்து அசத்தினார். இறுதியில், இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 399 ரன்களை குவித்தது. சூர்யகுமார் யாதவ் 72 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளார். இதையடுத்து, 400 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆஸ்திரேலிய அணி களமிறங்கியது. இதில் தொடக்க வீரர் மேதிவ் ஷாட் 9 ரன்னிலும், கேப்டன் ஸ்டீவ் ஸ்மித் ரன் ரன் எடுக்காமலும் ஆட்டமிழந்தனர். ஆஸ்திரேலிய அணி 9 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 56 ரன்கள் எடுத்திருந்தபோது மழை குறுக்கிட்டது. இதனால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. பின்னர் மழை நின்ற நிலையில் ஆட்டம் மீண்டும் தொடங்கியது. ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆட்டம் நிறுத்தப்பட்டதால் ஓவர்கள் குறைக்கப்பட்டு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதன்படி, ஆஸ்திரேலியாவுக்கு 33 ஓவரில் 317 ரன்கள் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. இதையடுத்து ஆஸ்திரேலியா வீரர்கள் வில்லியம் ஷார்ட் 9, மார்னஸ் லபுசேன் 27, டேவிட் வார்னர் 53, ஸ்டீவன் ஸ்மித் 0, ஜோஷ் இங்லிஸ் 6, அலெக்ஸ் கேரி 14, கேமரூன் கிரீன் 19, ஆடம் ஜம்பா 5, சீன் அபோட் 54, ஜோஷ் 23 ரன்கள் எடுத்து ஆட்டம் இழந்தனர். இந்நிலையில் ஆஸ்திரேலியா அணி 28.2 ஓவருக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 217 ரன்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. ஆஸ்திரேலியா அணியை 99 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்தியா தொடரை கைப்பற்றியது.



# மழையால் ஆட்டம் பாதிப்பு: இந்தியா ஆஸ்திரேலியா இடையேயான போட்டியில் ஓவர்கள் குறைப்பு

இந்நிலையில், 19.5 ஓவருக்கு 7 விக்கெட் இழப்பிற்கு 182 ரன்கள் எடுத்து தொடர்ந்து விளையாடி வருகிறது. அதன்படி, ஆஸ்திரேலியாவுக்கு 33 ஓவரில் 317 ரன்கள் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பின்னர் மழை நின்ற நிலையில் ஆட்டம் மீண்டும் தொடங்கியது. ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆட்டம் நிறுத்தப்பட்டதால் ஓவர்கள் குறைக்கப்பட்டு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆஸ்திரேலிய அணி 9 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 56 ரன்கள் எடுத்திருந்தபோது மழை குறுக்கிட்டது. இதனால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. இதில் தொடக்க வீரர் மேதிவ் ஷாட் 9 ரன்னிலும், கேப்டன் ஸ்டீவ் ஸ்மித் ரன் ரன் எடுக்காமலும் ஆட்டமிழந்தனர். இறுதியில், இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 399 ரன்களை குவித்தது. சூர்யகுமார் யாதவ் 72 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளார். இதையடுத்து, 400 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆஸ்திரேலிய அணி களமிறங்கியது. இஷான் கிஷன் 31 ரன்னில் வெளியேறினார். தொடர்ந்து ஆடிய கேப்டன் கே. எல்.ராகுல், சூர்யகுமார் யாதவ் ஜோடியில் சிக்சர், பவுண்டரிகளாக அடித்தனர். ராகுல் அரை சதமடித்து 52 ரன்னில் அவுட்டானார். கேமரூன் கிரீன் வீசிய 43வது ஓவரில் சூர்யகுமார் யாதவ் தொடர்ந்து 4 சிக்சர்கள் அடித்து அசத்தினார். ஷ்ரேயஸ் அய்யர் 86 பந்துகளில் 3 சிக்சர், 10 பவுண்டரிகள் உள்பட சதமடித்தார். அவர் 105 ரன்னில் அவுட்டானார். இது இவரது 3வது ஒருநாள் சதமாகும். சுப்மன் கில் 92 பந்துகளில் 4 சிக்சர், 6 பவுண்டரி உள்பட சதமடித்து அசத்தினார். அவர் 104 ரன்னில் ஆட்டமிழந்தார். 2வது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த இவர்கள் 200 ரன்கள் குவித்தனர். இந்திய அணி 9.5 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 79 ரன்கள் எடுத்திருந்த நிலையில் மழை பெய்ததால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. சுப்மன் கில், ஷ்ரேயஸ் அய்யர் ஜோடியைப் பிரிக்க முடியாமல் ஆஸ்திரேலிய அணியினர் திணறினர். இருவரும் கிடைத்த பந்துகளை சிக்சர், பவுண்டரிகளாக விளாசினர். சுப்மன் கில், ஷ்ரேயஸ் அய்யர் ஆகியோர் சதமடித்து அசத்தினர். அணியின் எண்ணிக்கை 16 ஆக இருக்கும்போது ருதுராஜ் 8 ரன்னில் ஆட்டமிழந்தார். அடுத்து இறங்கிய ஷ்ரேயாஸ் அய்யர் சுப்மன் கில்லுடன் இணைந்து அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இந்தியா, ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 2வது ஒருநாள் போட்டி இந்தூரில் இன்று நடைபெற்று வருகிறது. டாஸ் வென்ற ஆஸ்திரேலிய அணி கேப்டன் ஸ்மித் பந்து வீச்சை தேர்வு செய்தார். அதன்படி, இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக ருதுராஜ் கெயிக்வாட், சுப்மன் கில் களமிறங்கினர். இந்தியா, ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 2வது ஒருநாள் போட்டி இந்தூரில் இன்று நடைபெற்று வருகிறது. டாஸ் வென்ற ஆஸ்திரேலிய அணி கேப்டன் ஸ்மித் பந்து வீச்சை தேர்வு செய்தார். அதன்படி, இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக ருதுராஜ் கெயிக்வாட், சுப்மன் கில் களமிறங்கினர். அணியின் எண்ணிக்கை 16 ஆக இருக்கும்போது ருதுராஜ் 8 ரன்னில் ஆட்டமிழந்தார். அடுத்து இறங்கிய ஷ்ரேயாஸ் அய்யர் சுப்மன் கில்லுடன் இணைந்து அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இந்திய அணி 9.5 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 79 ரன்கள் எடுத்திருந்த நிலையில் மழை பெய்ததால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. சுப்மன் கில், ஷ்ரேயஸ் அய்யர் ஜோடியைப் பிரிக்க முடியாமல் ஆஸ்திரேலிய அணியினர் திணறினர். இருவரும் கிடைத்த பந்துகளை சிக்சர், பவுண்டரிகளாக விளாசினர். சுப்மன் கில், ஷ்ரேயஸ் அய்யர் ஆகியோர் சதமடித்து அசத்தினர். ஷ்ரேயஸ் அய்யர் 86 பந்துகளில் 3 சிக்சர், 10 பவுண்டரிகள் உள்பட சதமடித்தார். அவர் 105 ரன்னில் அவுட்டானார். இது இவரது 3வது ஒருநாள் சதமாகும். சுப்மன் கில் 92 பந்துகளில் 4 சிக்சர், 6 பவுண்டரி உள்பட சதமடித்து அசத்தினார். அவர் 104 ரன்னில் ஆட்டமிழந்தார். 2வது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த இவர்கள் 200 ரன்கள் குவித்தனர். இஷான் கிஷன் 31 ரன்னில் வெளியேறினார். தொடர்ந்து ஆடிய கேப்டன் கே.எல்.ராகுல், சூர்யகுமார் யாதவ் ஜோடியில் சிக்சர், பவுண்டரிகளாக அடித்தனர். ராகுல் அரை சதமடித்து 52 ரன்னில் அவுட்டானார். கேமரூன் கிரீன் வீசிய 43வது ஓவரில் சூர்யகுமார் யாதவ் தொடர்ந்து 4 சிக்சர்கள் அடித்து அசத்தினார். இறுதியில், இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 399 ரன்களை குவித்தது. சூர்யகுமார் யாதவ் 72 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளார். இதையடுத்து, 400 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆஸ்திரேலிய அணி களமிறங்கியது. இதில் தொடக்க வீரர் மேதிவ் ஷாட் 9 ரன்னிலும், கேப்டன் ஸ்டீவ் ஸ்மித் ரன் ரன் எடுக்காமலும் ஆட்டமிழந்தனர். ஆஸ்திரேலிய அணி 9 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 56 ரன்கள் எடுத்திருந்தபோது மழை குறுக்கிட்டது. இதனால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. பின்னர் மழை நின்ற நிலையில் ஆட்டம் மீண்டும் தொடங்கியது. ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆட்டம் நிறுத்தப்பட்டதால் ஓவர்கள் குறைக்கப்பட்டு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதன்படி, ஆஸ்திரேலியாவுக்கு 33 ஓவரில் 317 ரன்கள் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், 19.5 ஓவருக்கு 7 விக்கெட் இழப்பிற்கு 182 ரன்கள் எடுத்து தொடர்ந்து விளையாடி வருகிறது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.